

திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக் கூட்டரங்கில் நடந்தாய் வாழி காவேரி திட்டத்தின் கீழ் நடைபெற்று வரும் வளர்ச்சித் திட்டப்பணிகள் தொடர்பான ஆய்வுக்கூட்டம் அமைச்சர்கள் மு.பெ.சாமிநாதன், என். கயல்விழி செல்வராஜ் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. இதில் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர். மனிஷ் நாரணவரே மற்றும் துறை சாரந்த அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.



அரியலூர் மாவட்டம், புங்கங்குழி ஊராட்சி, ஆதனூர் கிராமத்தில் மருதையாற்றின் குறுக்கே ஆதனூர் – மழவராயநல்லூர் சாலை கி.மீ 0/6ல் கட்டப்பட்டுள்ள உயர்மட்ட பாலத்தினை அமைச்சர் சா.சி.சிவசங்கர் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்து, பார்வையிட்டார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் பொ.இரத்தினசாமி, சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பா , மாவட்ட காவல் கண்காணிப்பாளர் விஸ்வேஷ் பாலசுப்ரமணியம் சாஸ்திரி மற்றும் பலர் உள்ளனர்.

### ரூ.14.35 கோடி மதிப்பீட்டில் உயர்மட்ட பாலம் திறப்பு!

# அரியலூர் மாவட்டத்தில் புதிய வழித்தடத்தில் பேருந்து நீட்டிப்பு!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்தார்!

அரியலூர், அக். 14 -

அரியலூர் மாவட்டம், திருமானூர் ஊராட்சி ஒன்றியம், புங்கங்குழி ஊராட்சி, ஆதனூர் கிராமத்தில் நெடுஞ்சாலைத் துறையின் சார்பில் ரூ.14.35 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள உயர்மட்ட பாலத்தினை போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்.

தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களிடம் சென்னையில் ஆதனூர் கிராமத்தைச் சார்ந்த மாணவி தமது ஊருக்கு கூடுதல் பேருந்து வசதி கேட்டு கோரிக்கை வைத்தார். அந்த கோரிக்கையை தமிழ்நாடு முதலமைச்சர் உடனடியாக நிறை வேற்றும் விதமாக

ஆதனூர் கிராமத்தில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்ப) லிட், திருச்சி மண்டலம், அரியலூர் கிளை சார்பில் அரியலூர் சுண்டக்குடி செல்லும் பேருந்தை ஆதனூர் வரை புதிய வழித்தடத்தில் நீட்டிப்பு செய்து அமைச்சர் சா.சி.சிவசங்கர் கொடியசைத்து துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் பொ.இரத்தினசாமி, அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பா, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் விஸ்வேஷ் பாலசுப்ரமணியம் சாஸ்திரி ஆகியோர் கலந்துகொண்டனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான தமிழ்நாடு அரசின் போக்குவரத்து கழகம் சார்பில், பொதுமக்கள், மகளிர், மாற்றுத்திறனாளிகள், திருநங்கைகள், பள்ளி மற்றும் கல்லூரி மாணாக்கர்கள் உள்ளிட்டோர்களுக்கு அரசு பேருந்து சேவை சிறப்பாக செயல்பட்டு வருகிறது. அந்தவகையில் இன்றையதினம் அரியலூர் மாவட்டம், புங்கங்குழி ஊராட்சி, ஆதனூர் கிராமத்தில் நெடுஞ்சாலைத்துறையின் சார்பில் RIDF XXVI திட்டத்தின் கீழ் மருதையாற்றின் குறுக்கே, ரூ.14.35 கோடி மதிப்பீட்டில் ஆதனூர் மழவராயநல்லூர் சாலை கி.மீ 0/6ல் கட்டப்பட்டுள்ள உயர்மட்ட பாலத்தினை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு அமைச்சர் சா.சி.சிவசங்கர் திறந்து வைத்தார்.

அதனைத்தொடர்ந்து, ஆதனூர் கிராமத்தில் அரியலூர் சுண்டக்குடி செல்லும் பேருந்தை பொதுமக்கள் மாணவ, மாணவிகள், வியாபா ரிகள் உள்ளிட்டோர் பயன்பெறும் வகையில் ஆதனூர் வரை புதிய வழித்தடத்தில் நீட்டிப்பு செய்து அமைச்சர் சா.சி.சிவசங்கர் கொடியசைத்து துவக்கி வைத்தார்.

ஆம்னி பேருந்துகளை பொறுத்தவரையில் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு அவர்களை அழைத்து பேசி அவர்கள் நிர்ணயித்திருந்த தொகையை விட குறைத்து பேருந்துகளை இயக்கினார்கள். கடந்த ஆயுத பூஜை விடுமுறை காலங்களில் ஒரு சில ஆம்னி பேருந்துகள் கூடுதல் கட்டணம் வசூலித்ததாக வந்த தகவலின்படி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த தீபாவளிக்கு தனியார் பேருந்து நிறுவனங்களை அழைத்து பேசுவதற்கு போக்குவரத்து துறை ஆணையர் அவர்கள் காவல்துறையோடு இணைந்து கூட்டத்திற்கு ஏற்பாடு செய்துள்ளனர். இதற்கிடையே நேற்றைய தினம் 10க்கும் மேற்பட்ட நிறுவனங்கள் கூடுதல் கட்டணம் வசூலிப்பதாக தகவல் வந்திருக்கிறது. ஆம்னி பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தின் நிர்வாகிகளுடன் பேசியிருக்கிறேன். அவர்களும் சம்மந்தப்பட்ட நபர்களுக்கு அறிவுரைகள் வழங்குவதாக தெரிவித்துள்ளார்கள். கிட்டதட்ட 500க்கும் மேற்பட்ட தனியார் பேருந்து நிறுவனங்கள் இருக்கின்ற சூழலில் 10 நபர்கள் இது போன்றநடவடிக்கைகளில் ஈடுப்பட்டுள்ளார்கள்.

நாளைக்குள் அவர்கள் அந்த கட்டணத்தை குறைக்காவிட் டால் தீபாவளிக்கு முன்பாகவே உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் முனைவர்.ஆ.ரா.சிவராமன், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்ப)லிட்,கும்பகோணம் நிர்வாக இயக்குநர் தசரதன், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்ப) லிட், திருச்சி மண்டலம் பொது மேலாளர் டி.சதீஸ்குமார், மற்றும் ராம்குமார் நெடுஞ்சாலைத்துறை நபார்டு மற்றும் கிராம சாலைகள் கோட்டப்பொறியாளர் எஸ்.சரவணன், உதவிக் கோட்டப்பொறி யாளர் எஸ்.ஜெயந்தி, உதவிபொறியாளர் டி.ராஜா, ஒன்றிய கழக பொறுப்பாளர்கள் இரா.கென்னடி, மா.அன்பழகன், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி.லூயிகதிரவன், தொழிற்சங்க பிரதிநிதிகள், ஓட்டுநர்கள், நடத்துநர்கள் மற்றும் இதர அரசு அலுவலர்கள்; உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.



ஆத்தூர் தெற்கு நகர தி.மு.க., சார்பில் செயற்குழு உறுப்பினர்கள் கூட்டம் அவைத் தலைவர் மாணிக்கம் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தெற்கு நகரச் செயலாளர் ஏ.ஜி.ராமச்சந்திரன் கலந்து கொண்டு உரையாற்றினார். கூட்டத்தில் வடக்கு நகரச் செயலாளர் கே.பாலசுப்பிரமணியம், புவனேஸ்வரி வேல்முருகன், ஸ்டாலின், பாலமுரளி கிருஷ்ணன், சம்பத்குமார் மற்றும் வார்டு செயலாளர்கள், பி.எல்.ஏ. 2, கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்.

### ரூ.4.85 கோடி மதிப்பில்

# கரூர் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் புதிய திட்டப் பணிகள்!

## வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்!

கரூர், அக். 14 -

கரூர் சட்டமன்ற உறுப்பினர் வி. செந்தில்பாலாஜி, கரூர் மாவட்ட ஆட்சியர் மீ.தங்கவேல் தலைமையில், கரூர் ஊராட்சி ஒன்றியத்துக்கு உட்பட்ட பகுதிகளில் ரூ4.85கோடி மதிப்பிலான புதிய திட்ட பணிகளை தொடங்கி வைத்தார்.

கரூர் காதப்பாறை அன்பு நகரில் ரூ.46 லட்சம் மதிப்பீட்டிலான தார்ச் சாலை மேம்பாட்டு பணி, பிரேம் நகரில் தார் சாலை மேம்பாட்டு பணி, காந்தி நகரில் தார்ச்சாலை மேம்பாடு, முதல்வரின் கிராம சாலை மேம்பாடு திட்டத்தில் முத்து நகரில் தார் சாலை மேம்பாடு, ஏஜபிஏ நகரில் தார்சாலை மேம்பாடு, பூர்ணிமா கார்டனில் தார்சாலை மேம்பாடு, நெரூர் தெற்கு ஊராட்சியில் வேடிச்சிபாளையம் காட்டுத்தெருவில் தார் சாலை அமைக்கும் பணி,

மின்னாம்பள்ளி பஞ்சமாதேவி ஊராட்சியில் புல்லாகவுண்டனூர் மேல்நிலை நீர்தேக்கத்தொட்டி அமைத்து பைப்லைன் விஸ்தரிப்பு செய்யும் பணி, அரசு காலணி காந்தி நகர் மற்றும் 4வது தெருக்களில் சிமெண்ட் சாலை, நெரூர் வடக்கு ஊராட்சியில் வடிகால் பணி, சிமெண்ட் சாலை, நெரூர் பூசாரி வீடு முதல் நாகராஜ் வீடுவரை சிமெண்ட் சாலை, வடிகால் அமைத்தல், நெரூரில் சிமெண்ட் சாலை, நெரூர் மேற்கு தெருவில் 100000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர் தேக்கத்தொட்டி அமைத்து பைப்லைன் விஸ்தரிப்பு செய்யும் பணி.ஒத்தக்கடை கரூர் மெயின்ரோடு முதல் கால்நடை மருத்துவமனை வரை சாலை மேம்பாடு,

சோமூர் ஊட்சியில் திருமுக்கூடலூர் மந்தை முதல் அக்காளம்மன் கோவில் வரை சிமெண்ட் சாலை அமைக்கும் பணி, சோமூர் மெயின்சாலை புதிய கழிவு நீர் வடிகால் அமைக்கும் பணி, சிமெண்ட் சாலை அமைத்தல், திருமுக்கூடலூரில் 50000 லிட்டர் கொள்ளளவு மேல்லை நீர் தேக்கத்தொட்டி அமைத்து பைப்லைன் விஸ்தரிப்பு செய்தல் பணி, என மொத்தம் ரூ.4.85 கோடி மதிப்பிலான புதிய திட்ட பணிகளை கரூர் சட்டமன்ற உறுப்பினர், மாவட்ட கழக செயலாளர் வி.செந்தில் பாலாஜி தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் ம.கண்ணன், ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் வீரபத்திரன், ஊராட்சிகளின் உதவி இயக்குநர் சரவணன், வட்டாட்சியர் மோகன்ராஜ், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் செல்வி, விஜய லட்சுமி மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



சி.எஸ்.கே. குளோபல் பவுண்டேசன் சார்பில் புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் குன்றாண்டார்கோவில் மத்திய ஒன்றியம் செனையக்குடியில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் நிலையம் (RO Plant) திறப்பு விழா மாவட்டக் கழக செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன் தலைமையில் சி.எஸ்.கே. குளோபல் பவுன்டேசன் நிறுவனர் சித்திரை செல்வக்குமார் முன்னிலையில், எம்.சின்னத்துரை எம்.எல்.ஏ. திறந்து வைத்தார். நிகழ்வில் சி.சண்முகம், டி.முரளிதரன், சூரியமூர்த்தி உள்ளிட்ட கழக நிர்வாகிகள் சி.எஸ்.கே. குளோபல் பவுன்டைசன் நிர்வாகிகள் அருண், ராஜேஷ் கண்ணன், சங்கர், பாலக்குமார், வெங்கடேஸ்வரன் மற்றும் பொதுமக்கள் பங்கேற்றனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**அம்பத்தூர் பா. இரவைக்கண்ணன்**

**அக்டோபர் 14 (1992)**



அம்பத்தூர் நகரக் கழகத்தின் செயலாளராக பல ஆண்டுகள் பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றுள்ளார். மிசா கைதியாக ஓராண்டு காலம் சிறையில் இருந்தவர்.

துணிவுமிக்க உள்ளம்! பணிவுமிக்க பண்பாடு! கொள்கையில் உறுதி! குறிக்கோளுக்காக தியாகம் செய்யும் இயல்பு! என தலைவர் கலைஞர் அவர்களால் புகழப்பட்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.


October 13 2025

நினைவில் வாழும் திராவிடச் சுடர்


முன்னாள் அமைச்சர்,சட்டமன்ற உறுப்பினர்

# பரிதிஇளம்வழுதி



முன்னாள் – கழக துணை பொதுச் செயலாளர்

ஏழாம் ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி



எங்களின் அன்பே!

முத்தமிழறிஞர் தலைவர் கலைஞரின் இந்திரஜித் வீர அபிமன்யுவாய்,
கழகத் தலைவர் **தளபதியாரின்** உடன்பிறப்பாய்,
தாங்கள் கழகத்திற்காக பணியாற்றியதை நெஞ்சில் நிறுத்தி
**கழகத் தலைவர்** மற்றும் **இளைஞர் அணி செயலாளர்** தலைமையில்
தொண்டு செய்வோம் என்றும் கழக தொண்டனாக.

என்றும் உங்கள் நினைவுகளுடன்

**பரிதிஇளம்சுருதி** B.C.A.,M.A.,L.L.B.,

கழக அயலக அணி மாநில துணை செயலாளர்
எழும்பூர் சட்டமன்ற தொகுதி 99வது வார்டு மாமன்ற உறுப்பினர்

குடும்பத்தினர் மற்றும் நண்பர்கள்.